www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Kanchipuram Dt

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி வரலாறு மதிப்பெண்கள்: 90

### பகுதி - அ

**I.** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 20×1=20

1) ஹரப்பா மக்களின் முக்கிய வாழ்வாதார வழிமுறையாக ________ இருந்தது

அ) வேளாண்மை ஆ) மண்பாண்டம் செய்தல்

இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்

2) ஆதிச்சநல்லூர் ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது

அ) கோயம்புத்தூர் ஆ) திருநெல்வேலி இ) தூத்துக்குடி ஈ) வேலூர்

3) வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்தாக வளர்ந்த அரசு ________

அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

4) நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்

அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ரராட்சசம்

5) கரிகாலன் ________ மகனாவார்

அ) செங்கண்ணன் ஆ) கடுங்கோ இ) இளஞ்செட்சென்னி ஈ) அதியமான்

6) சங்ககாலத்தில் சோழர்களின் தலைநகரம் ________

அ) தஞ்சாவூர் ஆ) காவிரிப்பூம்பட்டினம் இ) உறையூர் ஈ) சுகர்கள்

7) ________ பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன

அ) அரிக்கமேடு ஆ) ஆதிச்சநல்லூர் இ) புகார் ஈ) பல்லாவரம்

8) பொருத்துக

| எழுதியவர் | | இலக்கிய படைப்பு |
|---|---|---|
| i) தன்வந்திரி | - | 1. சூரிய சிந்தாந்தா |
| ii) வராஹமிகிரா | - | 2. அமரகோஷா |
| iii) ஆர்யபட்டர் | - | 3. பிருஹத்சம்ஹிதா |
| iv) அமரசிம்மர் | - | 4. ஆயுர்வேதா |

அ) 4, 3, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 4,2,1,3 ஈ) 4,3,2,1

9) ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ________

அ) அத்வைதம் ஆ) விசிஷ்டாத்வைதம் இ) சைவசித்தாப்தம் ஈ) வேதாந்தம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10) இபின் பதூதா ஒரு ________ நாட்டுப் பயணி

அ) மொராக்கோ ஆ) பெர்சியா இ) துருக்கி ஈ) சீனா

11) _____ படுகையில் இருந்த சோழ அரசின் மையப்பகுதி சோழமண்டலம் எனப்படுகிறது.

அ) வைகை ஆ) காவிரி இ) கிருஷ்ணா ஈ) கோதாவரி

12) கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரத்தை கட்டினார்.

ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்

இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதியில் இப்போதும் பாடப்படுகிறது

ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

13) ________ என்ற நூலை கங்காதேவி எழுதினார்.

அ) மனுசரிதம் ஆ) ஆமுக்தமால்யதா

இ) பாண்டுரங்க மகாத்மியம் ஈ) மதுராவிஜயம்

14) சமண மதத்திலிருந்த போது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் ________

அ) அரிசேனா ஆ) தீர்த்தங்கரர் இ) சிவஞான சித்தியார் ஈ) தர்மசேனர்

15) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற நூலை இயற்றியவர்

அ) தாயுமானவர் ஆ) குமரகுருபரர் இ) இராமலிங்க அடிகள். ஈ) சிவப்பிரகாசர்

16) சிவாஜியின் ஆலோசனை சபை ________ என்று அழைக்கப்பட்டது

அ) அஷ்டபிரதானம் ஆ) அஷ்டதிக்கஜங்கள்

இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்ச பாண்டவர்கள்

17) இந்தியாவில் போர்ச்சுக்கீசியரின் அரசியல் தலைமையிடம் ________ ஆகும்

அ) கோவா ஆ) டையூ இ) டாமன் ஈ) சூரத்

18) இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் ________

அ) காரன்வாலிஸ் ஆ) தாமஸ் மன்றோ

இ) ராபர்ட் கிளைவ் ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

19) வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு ________ ஆகும்

அ) என்பீல்டு துப்பாக்கி ஆ) நவீன சீருடை

இ) புதிய தலைப்பாகை ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

20) "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" ________ ஆவார்.

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி

இ) இராஜாராம் மோகன்ராய் ஈ) ஆத்மராம் பாண்டுரங்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - ஆ

II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா எண்.30க்கு கட்டாயம் விடையளிக்கவும்:- 7×2=14

21) பெருங்குளம் : சிறுகுறிப்பு வரைக.

22) இந்தியாவின் இரும்புகாலம் குறித்து நீவிர் அறிந்தென்ன?

23) மகாபத்ம நந்தர் பற்றி குறிப்பு வரைக.

24) பண்டமாற்று முறையை விளக்குக

25) சத்ரப்கள் பற்றி நீவிர் அறிவது யாது?

26) அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக

27) ஐஹோல் கல்வெட்டுக் குறித்துச் சிறுகுறிப்பு வரைக

28) முகலாயர் காலத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதுக.

29) சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

30) மகல்வாரி முறை பற்றி சிறுகுறிப்பு வரைக.

பகுதி - இ

III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா எண்.40க்கு கட்டாயம் விடையளிக்கவும்:- 7×3=21

31) இந்தியாவின் இடைக்கற்கால நாகரிகம் நிலவிய இடங்களை குறிப்பிடுக.

32) மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.

33) காட்டைத்திருத்தியில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.

34) அசோகர் கலிங்கம் மீது படையெடுத்ததை பற்றி நாம் அறிவது என்ன?

35) சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்

36) இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது எவ்வாறு?

37) எல்லோரா மற்றும் எலிபெண்டாவின் நினைவுச்சின்னங்கள்

38) இராஜேந்திர சோழன் "கடாரம் கொண்டான்" என அழைக்கப்படுவது ஏன்?

39) ராக்சஷி தங்கடி போர் (1565)

40) நவவித்யா முறையை அறிமுகம் செய்தது முக்கிய முன் முயற்சியாகும் - எவ்வாறு?

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி:- 7×5=35

41) அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க

42) அ) புத்தரின் எண்வழிப்பாதையை விவரி?

(அல்லது)

ஆ) அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றி கூறுக.

43) அ) குப்தர்காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் - விவாதிக்கவும்.

(அல்லது)

ஆ) ஹர்ஷரின் வடஇந்தியப் படையெடுப்புகள் குறித்து விவரி?

44) அ) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக

(அல்லது)

ஆ) கோயில் - ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக.

45) அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகள் வரிசைப்படுத்துக.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பாமினி, விஜயநகர அரசுகள் ஆட்சி எல்லைகளை கீழுள்ள இடங்களை குறிக்கவும்.

1) சூரத்
2) கோவா
3) மதுரை
4) ஹம்பி
5) அகமது நகர்

46) அ) முகலாயக் கட்டடக்கலையின் சிறப்பு அம்சங்களை பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) நவீனக் கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக

47) அ) 1857ம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள் மற்றும் விளைவுகளையும் விவரி?

(அல்லது)

ஆ) மராட்டிய சிவாஜியின் ஆட்சிகால நிகழ்வுகளை ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் குறிப்பிடுக

*******

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com